# தமிழ்க் கல்விச்சேவை சுவிற்சர்லாந்து
## Tamil Education Service Switzerland

## பொதுத்தேர்வு - 2019

தமிழ்க் கல்விச்சேவையால் 25 ஆவது ஆண்டாக நடத்தப்பெறும் பொதுத்தேர்வு, மெய்வல்லுனர் போட்டிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**விதிமுறைகள் (தமிழ்க் கல்விச்சேவையின் தமிழ்ப்பள்ளிகளில் கல்விகற்காத மாணவர்களுக்கானது):**

- இவ்வாண்டு நடைபெறவுள்ள தமிழ்மொழி பொதுத்தேர்வுக்கு ஆண்டு ஒன்று முதல் ஆண்டு பன்னிரண்டு வரையான மாணவர்கள் விண்ணப்பிக்கலாம்.
- தாய்மொழித் தேர்வுடன் சைவசமயம், றோமன்கத்தோலிக்கசமயம் போன்ற பாடங்களுக்கும் விண்ணப்பிக்கலாம்.
- ஆண்டு ஒன்று தேர்வுக்கு 30.04.2012 ஆம் நாளுக்கு முன்பிறந்த மாணவர்களும், சுவிஸ் அரசபள்ளியில் **முதலாம்** வகுப்பில் கற்கும் மாணவர்களும் தோற்றுவதற்கு அனுமதிக்கப்படுவார்கள்.
- 30.04.2012 ஆம் நாளுக்குப் பின் பிறந்து மாநில வயதெல்லைக்கு அமைவாக சுவிஸ் பள்ளியில் முதலாம் வகுப்பில் கற்கும் மாணவர்களும் விண்ணப்பிக்கலாம்.
- சென்ற ஆண்டு பொதுத்தேர்வுக்குத் தோற்றிச் சித்திப்புள்ளி பெறாத மாணவர்கள், அடுத்த வகுப்புக்குத் தோற்றுவதாயின் தேர்வுப் பெறுபேற்றுடன் அனுப்பப்பெற்ற வகுப்பேற்றக் கடிதத்தின் பிரதியினையும் விண்ணப்பப் படிவத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.
- தொடர்ச்சியாகத் தேர்வுக்குத் தோற்றாத வயதுகூடிய மாணவர்கள் தேர்வுக்குத் தோற்ற விரும்பின், அவர்கள் தோற்றக்கூடிய வகுப்பினை பணியகத்துடன் தொடர்புகொண்டு உறுதிப்படுத்தியபின் விண்ணப்பிக்கவும்.
- தமிழ்மொழிக்கான பொதுத்தேர்வானது எழுத்துத்தேர்வு, புலன்மொழித் தேர்வு என இரு பிரிவுகளாக நடைபெறும். எழுத்துத்தேர்வு நிறைவுபெற்றதும் அதே மண்டபத்தில் புலன்மொழித்தேர்வுகளும் நடைபெறும்.

**விண்ணப்பிக்கும் மாணவர்கள்;**

**அ. வதிவிட அனுமதிப்பத்திரத்தின் பிரதி (இவ் ஆண்டு முதல் முறையாகத் தேர்வுக்கு விண்ணப்பிப்பவர்கள் மட்டும்)**
**ஆ. தேர்வுக் கட்டணம் செலுத்திய பத்திரத்தின் பிரதி**
**இ. இறுதியாகத் தோற்றிய தேர்வுப் பெறுபேற்றுப் பிரதி**

**போன்றவற்றை விண்ணப்பப்படிவத்துடன் இணைத்து, விண்ணப்ப முடிவுநாளுக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.**

---

| | |
|---|---|
| விண்ணப்ப முடிவு நாள்: | **28.02.2019 வியாழக்கிழமை** |
| தேர்வு நடைபெறும் நாள்: | **04.05.2019 சனிக்கிழமை** |
| விண்ணப்பம் அனுப்பவேண்டிய முகவரி: | **Examination Committee<br>TESS<br>Regensbergstrasse 238<br>Postfach 6711,<br>8050 Zürich.** |
| தேர்வுக்கட்டணம் செலுத்த வேண்டிய தபாற்கணக்கு இலக்கம்: | **87-592457-3** |
| தேர்வுக்கட்டணம்: | தமிழ் CHF **35.00**, சமயம் CHF **5.00** |
| பிந்திய விண்ணப்பக்கட்டணம்: | CHF **50.00** |

**(பிந்திய விண்ணப்பங்கள் 31.03.2019 ஆம் நாள்வரையே ஏற்றுக்கொள்ளப்பெறும்)**